சார்பு நீதிமன்றம், மதுராந்தகம்

OS.59/2010

இந்நீதிமன்றத்தின் எழுத்தர் திருமதி.D.ரேவதி, Grade-II Bench Clerk, என்பவரால் முறையோடு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பில் 1ஆம் சாட்சியத்தின் வாக்குமூலம் 1875ம் ஆண்டின் 10வது சட்டத்தின் வரைமுறைகளுக்கு உட்பட்டு 2019ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 01ம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| பெயர். எம்.ஜி.ரவி (PW1) | நாள்: 01.08.2019 |
| த/பெ.கோவிந்த ராஜ் | தொழில் |
| கிராமம்.பாண்டிச்சேரி | வட்டம் |

**வா.சா.1 சாட்சி அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பில் முதல் நிலை விசாரணை செய்யப்படுகிறார்.**

நான் பாண்டிச்சேரியில் வசித்து வருகிறேன். இந்த வழக்கில் நான் வாதி. பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். பிரமாண வாக்குமூலம் நான் சொல்லி தான் தயாரிக்கப்பட்டது. பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். அதில் உள்ள விவரங்கள் உண்மையானது. அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். 09.09.1999ம் தேதியில் என் அப்பா எனக்கு எழுதிவைத்த உயிலின் அசல் **வா.சா.ஆ.1.** (மேற்படி ஆவணம் சான்றொப்பம் இட்ட சாட்சி மூலம் குறியீடு செய்யவில்லை என்று பிரதிவாதி தரப்பில் ஆட்சேபணை செய்யப்படுகிறது) 11.01.2001ம் தேதியில் என்னுடைய தந்தை இறந்ததற்கான இறப்பு சான்றிதழ் **வா.சா.ஆ.2**. 29.08.2005ம் தேதியில் நாகராஜன் என்பவருக்கு ராதாபாய் மற்றும் சிலர் எழுதி கொடுத்த பொது அதிகார பத்திரத்தின் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.3**. 21.09.2005 தேதியிட்ட நாகராஜிக்கு ரவி எழுதிகொடுத்த பொது அதிகார பத்திரத்தின் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.4.** 21.09.2005 தேதியிட்ட நாகராஜிக்கு ரவி எழுதிகொடுத்த பொது அதிகார பத்திரத்தின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.4ஐ 26.10.2006ம் தேதியில் ரத்து செய்து விட்டார், பொது அதிகார ரத்து பத்திரம் **வா.சா.ஆ.5**. 29.08.2005ம் தேதியில் நாகராஜன் என்பவருக்கு ராதாபாய் மற்றும் சிலர் எழுதி கொடுத்த பொது அதிகார பத்திரத்தின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.3ஐ 26.10.2006ம் தேதியில் ரத்து செய்ததற்கான ரத்து

பத்திரம் **வா.சா.ஆ.6**. 16.11.2006ம் தேதியில் நாகராஜன் என்பவருக்கு நானும் ராதாபாயும் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பின் நகல் **வா.சா.ஆ.7**. மேற்படி அறிவிப்பை நாகராஜன் பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டை **வா.சா.ஆ.8**. மேற்படி அறிவிப்பிற்கு நாகராஜன் அனுப்பிய பதில் அறிவிப்பின் ஒளி நகல் **வாச.ா.ஆ-9.** 07.12.2006ம் தேதியில் நானும் ராதாபாயும் நாகராஜன் அனுப்பிய பதில் அறிவிப்பிற்காக அனுப்பப்பட்ட எங்களுடைய பதில் அறிவிப்பு **வா.சா.ஆ-10**. மேற்படி அறிவிப்பை வழக்கறிஞர் பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டை **வா.சா.ஆ.11**. மேற்படி நாங்கள் அனுப்பிய பதில் அறிவிப்பிற்கு 26.01.2007ல் அனுப்பப்பட்ட நாகராஜனின் பதில் அறிவிப்பு **வா.சா.ஆ.12**. 15.09.2005ம் தேதியில் முருகேசன் என்பவருக்கு நாகராஜன் என்பவர் எழுதி கொடுத்த கிரையப்பத்திரத்தின் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ-13**. எங்களுடைய முகவராக இருந்து நாகராஜன் கலைசெல்விக்கு எழுதி கொடுத்த கிரயப்பத்திரத்தின் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.14**. எங்களுடைய முகவராக இருந்து நாகராஜன் குணசேகருக்கு எழுதி கொடுத்த கிரயப்பத்திரத்தின் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.15**. 19.06.2006ம் தேதியில் மறுபடியும் எங்களுடைய முகவராக இருந்து நாகராஜன் கலைசெல்விக்கு எழுதி கொடுத்த கிரயப்பத்திரத்தின் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.16**. தாவா சொத்திற்கு என் பெயரில் செலுத்தப்பட்ட வரி ரசீது **வா.சா.ஆ.17**. தாவா சொத்திற்கு ஏழுமலை மற்றும் 3 நபர்கள் பெயரில் உள்ள கணினி பட்டா **வா.சா.ஆ.18**. தாவா சொத்திற்கான அடங்கல் கணக்கு **வா.சா.ஆ.19.** (மேற்படி ஆவணம் கிராம நிர்வாக அலுவலரால் கொடுக்கப்பட்டுள்ளதாகவும் மேற்படி ஆவணத்தை வழங்க கிராம நிர்வாக அலுவலருக்கு அதிகாரம் இல்லை என்று பிரதிவாதி தரப்பில் ஆட்சேபணை செய்யப்பட்டு குறியீடு செய்யப்படுகிறது) தாவா சொத்திற்கான அசல் பட்டா **வா.சா.ஆ.20**. தாவாப்படி தீர்ப்பாக வேண்டிக்கொள்கிறேன்.

(பிரதிவாதி வழக்கறிஞரின் வேண்டுகோளின் படி குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)